1972 டிசம்பர் 4]

மாண்புமி டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1971-72-ம் ஆண்டில் அறிவியல் ஆய்வுக்கூடம் அமைக்க உதவி பெற தகுதியுடைய பட்டியலில் வைதீஸ்வரா தனியார் உயர்நிலைப்பள்ளியினை சேர்க்க வாய்ப்பில்லை.

இவ்வாண்டு மேற்படி திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்க வாய்ப்பு இருந்தால் இப்பள்ளியின் விண்ணப்பம் உரிய காலத்தில் பரிசீலிக்கப்படும்.

மாயூரம் கிளை நூலகத்திற்கு கட்டடம்

*24 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரத்தில் உள்ள கிளை நூலகத்திற்கு புதிய கட்டடம் கட்டும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரத்தில் இந்தக் கிளை நூலகத்திற்காக புதிய கட்டடம் கட்டவேண்டி ஒரு இடத்தை ஏற்பாடு செய்து, அந்த இடம் கையகப்படுத்த இயலாத காரணத்தினால், அதாவது காலதாமதம் ஆகின்ற காரணத்தினால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. எனவே, இனியும் அதைத் துரிதப்படுத்த அரசு ஆவன செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இது பற்றிய நடவடிக்கைகளை மாவட்ட நூலகக் கிளையினர்தான் மேற்கொள்ளுதல் வேண்டும். அவர்கள் எந்த அளவிலே நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற குறிப்பு அரசிடத்திலே இல்லை. அவர்கள், அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலும் எவ்வித உதவி செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்களோ அதை மாவட்ட நூலகக் கிளையினர் எழுதி அரசுக்கு அனுப்பினால் அதன் மீது தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : தலைவர் அவர்களே, இந்த மாநிலத்திலே எத்தனை நூலகங்கள் சொந்தக் கட்டடங்களிலே இயங்குகின்றன என்ற விவரத்தை அறிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி வேண்டும்.

Libraries in Hosur and Denkanikotta taluks

* 25 *Q*.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the steps that are being taken by the Government to supply adequate number of Telugu books, journals and newspapers to the Local Library Authorities in Hosur and Denkanikotta taluks ; and

(*b*) the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) ஹோசூர், தெங்கனிக்கோட்டையிலுள்ள கிளை நூலகங்களில் தெலுங்கு மொழிப் பத்திரிக்கைகளும் வார, மாத, இதழ்களும் வாங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஹோசூர் தெங்கனிக்கோட்டை மற்றும் சில இடங்களிலுள்ள கிளை நூலகங்களிடமிருந்து வந்த வேண்டுகோளுக்கிணங்க, வார, மாத இதழ்களை அதிகமாக வாங்குவதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது. ஹோசூர், அன்செட்டிலுள்ள கிளை நூலகங்கள் அதிகமாக தெலுங்குப் புத்தகங்களை வழங்க கேட்டுக் கொண்டுள்ளனர். நிதி நிலைமை அனுமதித்தால் புதிய புத்தகங்கள் கிளை நூலகங்களுக்கு வாங்கி வழங்கப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the Hon. Minister for Education is kind and he has assured us that he would take steps to redress the grievances of the linguistic minorities. But in actuality, even though we have made representation in the District Development Council meeting, the local officers have not taken any steps to improve the situation. Even a few days back I was informed that in libraries in Hosur and Denknaikottai adequate number of Telugu books and journals and newspapers are not vailable. Some of the local officers appear to be fanatical or discriminatory in their outlook. So, may I know from the Hon. Minister whether he will take steps to appoint an officer to go into the matter and redress the grievances of the linguistic minorities at an early stage in this direction?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது குறிப்பிட்டபடி, ஹோசூர், தெங்கனிக்கோட்டை நூலகங்களில் ஆந்திர பிரபா, ஆந்திர பத்திரிகா, பிரஹதி, ஆந்திர ஜோதி, சந்திரமாமா, பாரதி போன்ற மாத இதழ்கள் போடப்படுகின்றன. ஆனல், தெலுங்குப் புத்தகங்களை, தெலுங்கு பேசப்படுகின்ற பகுதிகளிலே போடுவதற்கான ஏற்பாடுகளை